**செ. கு. எண்**: 294 **நாள்**: 18.08.2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 18.8.2012

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், ஏழாயிரம்பண்ணை குறுவட்டம், துலுக்கன்குறிச்சி கிராமத்தில் செயல்பட்டு வரும் தனியார் பட்டாசு தொழிற்சாலை ஒன்றில் 10.8.2012 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த சிவகாசி வட்டம், கொட்டமடக்கிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னமுனியாண்டி என்பவரின் மகன் திரு. முனீஸ்வரன் சிகிச்சை பலனின்றி 12.8.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், மாரனேரி கிராமத்தில் செயல்பட்டு வரும் தனியார் பட்டாசு தொழிற்சாலையில் 13.8.2012 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் கல்லமநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி என்பவரின் மனைவி திருமதி ராமலட்சுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த வெடி விபத்துகளில் அகால மரணமடைந்த திரு. முனீஸ்வரன் மற்றும் திருமதி ராமலட்சுமி ஆகியோரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், மாரனேரி கிராமத்தில் செயல்பட்டு வரும் தனியார் பட்டாசு தொழிற்சாலையில் 13.8.2012 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் சிங்கம்பட்டி, மாரனேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. திருப்பதி என்பவரின் மகன் செல்வராஜ் காயமடைந்து மருத்துவமனையில்

அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவருக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், விருதுநகர் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் காலமான திரு. முனீஸ்வரன் மற்றும் திருமதி ராமலட்சுமி ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் மாரனேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வராஜுக்கு 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**